மண்டலத்தில் 755 எக்கரும், குன்னூரில் 322 எக்கரும், கூடலூரில் 285 எக்கரும் பலவந்தமாக ஆக்ரமிப்புச் செய்திருக்கிறார்கள். "என்க்ரோச்" பண்ணி பயிர் செய்திருக்கிறார்கள். குத்தகை குறைவாகக் கொடுக்கப்படுகிறது. ஒரு எக்கர் குத்தகைக்கு ஒப்பு கொள்கிறவர்களுக்கு ஏராளமான லாபம் வருகிறது. "அன் அப்ஜக்ஷனபிள்" புறம்போக்கில் ஏற்பட்டிருக்கும் ஆக்ரமிப்புகளை நீக்கி, அவர்களைக் குத்தகைக்காரர்களாக மாற்றி, பக்கத்து நிலங்களில் கிடைக்கும் குத்தகைக்குச் சரியாக நிர்ணயிக்க, நீலகிரி மாவட்டக் கலெக்டர் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களும் இன்னும் சில உறுப்பினர்களும் கேட்டுவருவதன் அடிப்படையில், கருத்துக் கேட்கப்பட்டு, வருவாய்த்துறை வாரியத்திற்கு அவர்கள் பரிவுரைகளை அனுப்பியிருக்கிறார்கள். அங்கே ஆக்ரமித்துக்கொண்டு இருக்கும் விவசாயிகளைக் குத்தகைக்காரர்களாக மாற்றி, மற்ற நிலங்கள் போல குத்தகைக்கு விட வேண்டும் என்கிற யோசனை இருக்கிறது. சீக்கிரமாக ஒரு முடிவு எடுக்கப்படும்.

*288 வினா : **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி தாலுக்காவில் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் அடமானம் செய்வது சம்பந்தமாக திரு நா. ரங்கரத்தினம் அவர்களின் பெயரால் வெளியிடப்பட்ட நோட்டீஸ் ஒன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குச் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களால் 1—4—1968 அன்று அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம், எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை. ஆனால் அச்சுக் குறிப்பு ஒன்றுடன் கூடிய முறையீடு ஒன்று, திருச்சிராப்பள்ளி நில மற்றோர் சங்கத் தலைவரான திரு நா. ரங்கரத்தினத்திடமிருந்து நேரடியாகக் கிடைத்துள்ளது.

(இ) நிலங்களை ஒப்படை செய்வதில் தாமதம் குறித்து முறையீட்டிலும் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்த புகார்களும், வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு எதிராக அவற்றில் கூறப்பட்டிருந்த குற்றச் சாட்டுகளும் திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அதிகாரியுடனும் வருவாய்த்துறை வாரியத்துடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டன. திருச்சி வட்டத்தில் நிலங்கள் ஒப்படை செய்வதற்கான மனுக்கள் குறித்து, நிலங்கள் கிடைக்கும் போது தக்க வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாலும், புகார் கொடுத்த திரு நா. ரங்கரத்தினமே, தன்னுடைய அச்சுக்குறிப்பு குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று அறிக்கை விடுத்துள்ளதாலும் இது குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்று கருதப்பட்டது.

திரு. கே. விநயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புகார் அடங்கிய ஒரு ஹேண்ட் பில் விளம்பரம் செய்தபிறகு இந்தக் குறைபாடுகள் எல்லாம் அதிகாரிகளால் தீர்க்கப்பட்டதா ? அல்லது அதற்கு முன்னரே இந்த ஹேண்ட் பில்லை அவர் விளம்பரம் செய்தாரா ? After publishing the hand-bill, how many cases have been redressed speedily by the Collector as well as District Revenue Officer in assigning the land ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, சாதாரண கேள்வியிலேயே உறுப்பினர் அவர்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். திரு. ரங்கரத்தினம் என்பவர் டிஸ்மிஸ் செய்யப்பட்ட வில்லேஜ் கர்ணம் ஆதாரமில்லாத பெட்டிஷன் எழுதுவது அவருடைய வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. "நான் எழுதியது தப்பு, நான் எழுதியதில் நியாயம் இல்லை" என்று அவரே சொல்லியிருக்கிறார். திரு. ரங்கரத்தினம் அந்த நோட்டீஸை அவரே திரும்பப் பெற்றுக் கொண்டார்.